## புகையிலை தொடர்பான கொள்கை: சுயநல அக்கறை உடையோரின் ஆதிக்கத்தைக் குறைத்தல்

உலக சுகாதார அமைப்பின் (WHO) புகையிலை கட்டுப்பாடு தொடர்பான கட்டமைப்பை (FCTC), நவம்பர் 2003 இல் இலங்கை அங்கீகரித்தது. FCTC என்பது புகையிலைப் பொருள் நுகர்வால் ஏற்படும் சுகாதாரக் கேடுகள் மற்றும் புகையிலை தொழில்துறையினரின் சுய நலன்கள் காரணமாக பிரயோகிக்கப்படும் அழுத்தங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் வகையில் உருவாக்கப்பட்ட ஒரு உலகளாவிய ஒப்பந்தமாகும். கொள்கை வகுப்பாளர்கள் மீது புகையிலைத் தொழில்துறையினரால் பிரயோகிக்கப்படும் முறையற்ற ஆதிக்கத்தை உணர்ந்து, FCTC ஆனது தெளிவான பாதுகாப்புப் பொறிமுறையொன்றான பொது விதிக்கொள்கை 5.3ஐ உருவாக்கியது. “புகையிலைப் பொருள் கட்டுப்பாடு தொடர்பாக, நாடுகள் பொது சுகாதார கொள்கைகளை அமைத்து செயல்படுத்துகையில், புகையிலைத் தொழில் துறையினரின் வணிக மற்றும் சுயநல அக்கறைகளிலிருந்து இக் கொள்கைகளைபாதுகாக்கும் விதத்தில், குறித்த தரப்பினர் தேசிய சட்டங்களுக்கு அமைவாக செயல்படவேண்டும்”, என இக்கொள்கை குறிப்பிடுகின்றது.

இலங்கை FCTCக்கு அங்கீகாரம் அளித்திருந்தாலும், அது இன்னும் 5.3 வது விதிக்கொள்கையை நடைமுறைப்படுத்தவில்லை. இதனால், புகையிலைப் பொருள் கொள்கைகள், வணிக மற்றும் சுயநல அக்கறைகொண்டோரின் ஆதிக்கத்தால் பாதிக்கப்படக்கூடியவையாகவுள்ளன. வெரிடே ரிசெர்ச்சின் முன்னைய ஆய்வொன்றான, “சிகரெட் வரிவிதிப்பு குறித்த ‘வேறுபட்ட உண்மைகளுக்கு’ யார் பொறுப்பு” என்ற கட்டுரை, ஊடகங்களின் மீது இத்தொழில் துறையினர் பிரயோகிக்கும் முறையற்ற செல்வாக்கின் அறிகுறிகளை வெளிப்படுத்தியது. இவ்வாய்வுக் கட்டுரை, இலங்கையில் அரச துறையிலுள்ளோர் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் மீது, இத் தொழில்துறையினர் பிரயோகிக்கும் முறையற்ற ஆதிக்கத்தின் அறிகுறிகள் பற்றி விவாதிக்கிறது. அடுத்து, கொள்கைகளை இவ்வாறான ஆதிக்கங்களில் இருந்து பாதுகாக்கத்தொடங்குவதற்கு பிரயோகப்படுத்தக்கூடிய உத்திகளைப் பரிந்துரைக்கிறது. புகையிலை பொருள் கொள்கை விட்டுக்கொடுப்புகளுக்கு உட்படுத்தப்படுவதில்லை என்பதை உறுதிப்படுத்த, FCTC க்கு முழுமையான அங்கீகாரத்தைக் கொடுக்க வேண்டும் என்பதன் முக்கியத்துவத்தை பரிந்துரைகள் வலியுறுத்துகின்றன.

### இலங்கையின் நிலவரம்

இலங்கையில், சிகரெட் தொழில்துறையானது, ஒரு ஏகபோக உற்பத்தியாளரைக் கொண்டுள்ளது. அது இலங்கை புகையிலை நிறுவனமாகும். ஒரு ஏகபோக உற்பத்தியாளராக, வரிவிதிப்பு மற்றும் கட்டுப்பாட்டு ஒழுங்குமுறைகள்

தொடர்பான முடிவுகளை எடுப்பவர்கள் மீது செறிவான ஆதிக்கத்தைச் செலுத்தும் வல்லமை CTCக்கு உள்ளது.

இலங்கையில் CTCயின் விருப்புக்கள், தேசிய நலன்களான பொது சுகாதாரம் மற்றும் அரச வருமானம் ஆகிய இரண்டினதும் பெரும் பகுதிகளுடன், நேரடி முரண்பாட்டை கொண்டுள்ளது. மக்கள் அதிகமாக புகைப்பிடிக்கும் போதும், இளம் வயதிலேயே புகைப்பிடிக்கத் தொடங்கும் போதும், புகைப்பிடிப்பிற்கு அடிமையாகும் போதும் CTC நன்மை அடைகின்றது. தேசிய நலனான பொதுச்சுகாதாரம் இம் மூன்று விடயங்களாலும் பாதிக்கப்படுகிறது. எந்தவொரு சிகரெட் விலையிலும், வரியின் சதவீதம் குறைவாக இருக்கும்போது CTC யும், வரியின் சதவீதம் அதிகமாக இருக்கும் போது அரச திறைசேரியும் பயனடைகின்றன.

பொது நலனா அல்லது நிறுவனத்தின் நலனா, என்ற இதுபோன்ற சூழ்நிலைகளில், முடிவுகளை எடுப்பவர்கள், நிறுவனத்தின் முறையற்ற செல்வாக்கிற்கு உட்படுத்தப்படாமலிருப்பது முக்கியம். FCTC இன் 5.3 வது விதிக்கொள்கையானது இத்தகைய ஆதிக்கங்களில் இருந்து பாதுகாக்க முயல்கின்றது. எவ்வாறாயினும், 5.3 வது விதிக்கொள்கையை நடைமுறைப்படுத்தத் தவறியமை, இலங்கையின் அரச துறையினர், சுயநல அக்கறை கொண்டோரின் ஆதிக்கத்திற்கு உட்படும் ஒரு சூழலை உருவாக்கியுள்ளது என்பதற்கான வலுவான அறிகுறிகள் உள்ளன.

### அரச துறையினர் மீது செலுத்தப்படும் ஆதிக்கங்களுக்கான அறிகுறிகள்


வெரிட்டே ரிசெர்ச்சின் முன்னைய ஆய்வு, “நிதி அமைச்சு முதல் மத்திய வங்கிக்கான திறைசேரி வரை, இலங்கையில் உள்ள எந்தவொரு நிதி நிறுவனமும், சிகரெட்டுகளை வரிவிதிப்பு அல்லது விலை நிர்ணயம் செய்வதற்கென ஒரு ஒத்திசைவான முறையையோ அல்லது சூத்திரத்தையோ பின்பற்றுவதில்லை” என்று சுட்டிக்காட்டியது. மேலே மேற்கோள் காட்டப்பட்ட முதலாவது ஆய்வில் குறிப்பிடப்பட்டபடி, ஊடகங்களில் தோன்றிய தவறான நிலைப்பாடுகள், தரவு மற்றும் ஆய்வுகளுக்கு மாறான, சிகரெட் வரி திருத்தங்களின் மோசமாக நிர்வாகத்திற்கு, நிதி அமைச்சின் அரச துறையினரே பங்களித்திருந்தனர் என்ற கருத்து எதிரொலித்திருந்தது. அரச துறையினரின் ஆலோசனை மற்றும் நடவடிக்கைகளை கவனத்தில் கொள்ள மூன்று காரணங்கள் உள்ளன.

### பிரச்சினை 1: சிகரெட்டின் வரிக்கு விலை, விகிதத்தை வீழ்ச்சியடைய அனுமதிக்கின்றமை

2005 ம் ஆண்டுக்கு பின்னர், சிகரெட்டுகளின் வரிக்கு விலை விகிதம் எவ்வாறு மாற்றமடைந்து பின்னர் கணிசமாக வீழ்ச்சியடைந்தது என்பதை படம் 1 காட்டுகிறது; ஒக்டோபர் 2016 இல் மது வரியை அதிகரித்தும், VAT ஐ மீண்டும்

அறிமுகப்படுத்தியும் சரியான நடவடிக்கை எடுப்பதற்கு முன்னராக, (2015 க்குப் பிறகு) இது மேலும் வீழ்ச்சியடைந்தது. Q1-Q3 2016 இல் சிகரெட்டுகளுக்கான வரிக்கு விலை விகிதம் 4% ஆல் குறைந்துவிட்ட பிறகே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டது (படம் 1 ஐப் பார்க்கவும்). அப்போது, அரசாங்கம் மற்ற அனைத்து பொருட்களின் மீதான VAT ஐ 4% ஆல் அதிகரித்த போதிலும், சிகரெட்டுகளுக்கு VAT இலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்தது.

**படம் 1 : விலையில் வரியினளவு (2004 முதல் இன்று வரை )**




**மூலம்:** இலங்கை வர்த்தமானி அறிவிப்புகள் (பல்வேறு ஆண்டுகள்); சிகரெட்டுகளின் சந்தை விலைகள் (2004-2018).

## பிரச்சினை 2: அதிக நன்மை பயக்கும் வரி தொடர்பான திருத்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்தல்

2016 அக்டோபரில் எடுக்கப்பட்ட திருத்த நடவடிக்கை அரச வருமானத்தை அதிகரிப்திலும், பொது சுகாதாரத்திற்கு ஏற்படும் கேடுகளைக் குறைப்பதிலும் (ஊடக அறிக்கைகள் வேறு விதமாக அறிக்கையிட்ட போதிலும்) வெற்றிகரமானதாக இருந்தது. இதனால் சிகரெட் நுகர்வு 18.4% ஆல் குறைந்துள்ளதாகவும், மது வரி மற்றும் வற் வரியிலிருந்தான அரச வருமானம், 2016 முதல் 2017 வரையான காலப்பகுதியில் ரூபாய் 17.6 பில்லியனால் அதிகரித்திருந்ததாகவும் புகையிலை நிறுவனத்தின் ஆண்டறிக்கையிலேயே குறிப்பிடப்பட்டிருந்தது. இக் கொள்கைக்கு எதிராக நிதி அமைச்சால் அமைச்சரவைக்கு எழுத்து மூல ஆலோசனைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபையின் ஆதரவுடன்,சுகாதார அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட அமைச்சரவை ஆய்வறிக்கை மூலம் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. நிதி

அமைச்சின் எதிர் நடவடிக்கை இக் கொள்கை அமுலாக்கத்தை பல மாதங்களால் தாமதப்படுத்தியது.

**பிரச்சினை 3: வருமான வாய்ப்புக்களை பெறும் பொருட்டு தொடர்ச்சியாக வரிகளை சரிசெய்ய தவறியமை**

சிகரெட்டுகளைப் பொறுத்தவரை,விலை/வரி உயர்வால் குறைத்துக்கொள்ள எத்தணிக்கும் நுகர்வுச் சதவீதமானது, விலை உயர்வுச் சதவீதத்திலும் கணிசமானளவு சிறியது என்பதற்கு தெளிவான சான்றுகள் எப்போதும் உள்ளன. இது 2016 ம் ஆண்டு வரி அதிகரிப்புக்குப் பின்னர் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது. இது குறிப்பது யாதெனில் விலை / வரி அதிகரிப்பு எப்போதும் அதிக வருமானத்திற்கு வழிவகுக்கின்றது.

23 மே 2018 அன்று “சிகரெட் விலைநிர்ணயத்தின் மறைக்கப்பட்ட பக்கம்” என்ற தலைப்பில் வெரிட்டே ரிசெர்ச்சினால் வெளியிடப்பட்ட ஆய்வுக்குறிப்பு, 2005 ஆம் ஆண்டிலிருந்து இத்தொடர்பை புரிந்துகொண்ட புகையிலைத் தொழில் துறையினர், எவ்வாறு அரசாங்கம் வரிகளை அதிகரித்ததை விட, தமது வரி நிகர விலையை வேகமாக அதிகரித்தனர், என்பதை சுட்டிக்காட்டியது. அத் தொழில்துறை இலாபமும் அதற்கேற்ப அதிகரித்து வருகிறது. இது விலை உயர்வின் நேர்மறையான வருமானமீட்டும் தன்மையை புகையிலைத் தொழில்துறை சரியாகக் கணக்கிட்டுள்ளது என்பதை காட்டுகிறது. ஆயினும்கூட, கடந்த 20 மாதங்களில், வருமான இலக்குகளை அடைவதற்கு அரசாங்கம் சிரமப்பட்டு வருகின்றது என்ற அடிப்படையில், தனிநபர் வருமானங்கள், வணிக அமைப்புக்கள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் மீது குறிப்பிடத்தக்க வரி உயர்வை அறிமுகப்படுத்திய போதிலும், சிகரெட் மீதான வரியை மாற்றாமல் வைத்திருக்க நிதி அமைச்சு முடிவு செய்திருந்தது.

***

மேற்கூறிய விடயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை நிதி அமைச்சின் ஆலோசனை மற்றும் செயல்களின் போக்கு, பொது சுகாதாரம் அல்லது பொது வருமானம் சார்ந்த தேசிய நலன்களுடன் ஒத்துப்போவதாகத் தெரியவில்லை. இப்படியான செயல்கள் எழுப்பும் கேள்வி: நிதி அமைச்சினால் எடுக்கப்படும் முடிவுகளில், சுய நல அக்கறையுடையோரால் செலுத்தப்படும் ஆதிக்கம் என்ன, பொது நலனுக்காக அந்த ஆதிக்கத்தை எவ்வாறு குறைக்க முடியும்?

**புகையிலை பொருள் கொள்கையில் உள்ள ஆதிக்கங்களை எதிர்த்துப் போராடல்: மூன்று வகையான வெளிப்படுத்துகைகள்**

இலங்கையின், புகையிலை பொருள் கொள்கையில் காணப்படும் தலையீடுகளை எதிர்த்து போராடுவதற்கான ஒரு தொடக்கத்தை FCTC பிரிவு 5.3 ஐப் பயன்படுத்துவதன் மூலமும், அதைச் செயல்படுத்துவதில் தொடர்புடைய

WHO வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதன் மூலமும் அடைய முடியும். இந்த வழிகாட்டுதல்கள் கீழே வழங்கப்பட்டுள்ள மூன்று வகையான வெளிப்படுத்துகைகளாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

1. புகையிலை தொழில்துறை பங்குதாரர்களின் வெளிப்படுத்துகை: புகையிலை தொழில் பங்குதாரர்கள் அல்லது அதன் நலன்களை மேலும் மேம்படுத்துவதற்காக வேலை செய்பவர்கள், பதிவு செய்யும் செயல்முறையின் மூலம் தங்களை வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும் (இவ் அளவீடு WHO FCTC வழிகாட்டுதல்களின் கொள்கை 2 இலிருந்து பெறப்பட்டது)

2. தகவல்தொடர்புகள் பற்றிய வெளிப்படுத்துகை: புகையிலை தொழில்துறை பங்குதாரர்களுக்கும் கொள்கை வகுப்பாளர்களுக்கும் இடையிலான அனைத்து தகவல்தொடர்புகளும் பதிவு செய்யப்பட்டு வெளியிடப்பட வேண்டும். (இவ் அளவீடு WHO FCTC வழிகாட்டுதல்களின் கொள்கை 3 இலிருந்து பெறப்பட்டது)

3. முரண்பாட்டு விருப்புக்கள் பற்றிய வெளிப்படுத்துகை: புகையிலைத் தொழில்துறையால் (அல்லது அதன் நலன்களை மேலும் மேம்படுத்துவதற்காக வேலை செய்பவர்களால்) கொள்கை வகுப்பாளர்கள், அரசியல் கட்சிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக அமைப்புகளுக்கு வழங்கப்படும் சேவைகள் மற்றும் நிதி உள்ளிட்ட எந்தவொரு ஊக்கத்தொகையோ நன்மையோ தொடர்பான விடயங்களை, பரிமாற்றுதல்களில் தொடர்புடையவர்கள் வெளிப்படுத்துவதை அவசியமாக்குதல். (இவ் அளவீடு WHO FCTC வழிகாட்டுதல்களின் பரிந்துரை 2 இலிருந்து பெறப்பட்டது).

இந்த மூன்று நடவடிக்கைகளால் மட்டுமே புகையிலைப்பொருள் கொள்கையில் காணப்படும் பிரச்சினையான, தொழில்துறையின் ஆதிக்கத்தை முழுமையாகத் தீர்க்க முடியாது என்றாலும், இவ்வாறான ஆதிக்கங்கள் ஏற்பட அனுமதிக்கும் வெளியிடப்படாத தொடர்புகளை அவை வெளிப்படுத்தக்கூடும். அவ்வாறான தொடர்புகள் அடையாளம் காணப்பட்டவுடன், கொள்கை வகுப்பாளர்களுக்கும் புகையிலை தொழில் துறையினருக்கும் இடையிலான தொடர்பாடல்கள் மற்றும் முரண்பாட்டு விருப்புக்களை தடுப்பதற்கு FCTC இனால் பரிந்துரைக்கப்பட்டிருக்கும் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க முடியும். ஆகவே, வெளிப்படுத்துகைகளுக்கு தேவையான கட்டமைப்பை உருவாக்குதல், புகையிலை பொருள் கொள்கையில் சுய நல அக்கறையுடையோரின் ஆதிக்கத்தைக் குறைப்பதில், இலங்கைக்குள்ள நீண்ட பயணத்தைத் தொடங்குவதற்கான ஒரு விவேகமான வழியாகும்.